# TAMIL NADU POLICE HOUSING CORPORATION LTD.

(ISO 9001:2000 CERTIFIED COMPANY)

QUARTERLY BULLETIN ISSUE NO. 3 JUL - SEP 2007

மார்ச் 31, 2007ம் ஆண்டு முடிவின் 50% ஈவுத்தொகை ரூ.50 இலட்சத்திற்கான காசோலையினை முதல்வரது அறையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களிடம் காவல்துறை இயக்குநர்/தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் ஆகஸ்ட் 6, 2007 அன்று ஒப்படைத்தார்.

தலைமைச் செயலர், காவல்துறை தலைமை இயக்குநர், முதல் அமைச்சரின் செயலர், உள்துறை செயலர் மற்றும் நிதித்துறை செயலர் ஆகிய மூத்த அதிகாரிகள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

A cheque for Rs.50 Lakhs was handed over on 6th August 2007 to the Honourable Chief Minister of Tamil Nadu Kalaignar. M. Karunanidhi, in the Chief Minister's chamber by the DGP and CMD, TNPHC Ltd. This represented the dividend for the year ending 31st March 2007 @ 50%.

Other senior officers present on the occasion included the Chief Secretary, the Director General of Police, Secretary to the Chief Minister, Secretary, Home Department and Secretary, Finance Department.

**DIVIDEND CHEQUE FOR Rs 50 Lakhs BEING HANDED OVER TO THE HON'BLE CHIEF MINISTER OF TAMILNADU BY THE CMD, TNPHC Ltd.**



## இருபத்து ஆறாவது
## வருடாந்திர பொதுக் கூட்டம்

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் இருபத்து ஆறாவது வருடாந்திர பொதுக் கூட்டம் ஜுலை 10, 2007 அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இயக்குநர்களின் அறிக்கை, 31.03.2007ம் நாளைய தணிக்கை செய்யப்பட்ட இருப்புநிலைக் குறிப்பு, 31.03.2007ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்கான இலாப நட்டக் கணக்கு ஆகியவைகள் ஏற்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு அரசின் சமஉரிமை பங்குத் தொகைக்கான ஈவுத்தொகை 50% என அறிவிக்கப்பட்டது.

இயக்குநர்களுக்கான உரையில் கடந்த ஆண்டுகளில் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் ஆற்றிய செயல்பாடு மற்றும் நிதி சாதனைகளை தலைவர் விளக்கினார். இதில் 2006-2007 ஆண்டின் சாதனைகளை தனித்து குறிப்பிட்டார்.

ISO 9001 : 2000 சான்றிதழ் 12.12.2006 இல் இருந்து மேலும் மூன்றாண்டுகளுக்கு புதுப்பித்தது, 31.03.07 முதல் காலாண்டு சிற்றறிக்கை வெளியிட துவங்கியது, கழக செயல்முறையினை மிகவிரைவில் கனிணி மயமாக்கியது மற்றும் திட்டங்களின் செயல் மற்றும் நிதி வளர்ச்சியினை கண்காணிக்க பயன்பாட்டு மென்பொருள் தயார் செய்தது ஆகியவைகளை தலைவர் சுட்டிக் காட்டினார். தமிழ்நாடு அரசின் மேலான வழிகாட்டுதலுக்கும், ஆதரவுக்கும் நன்றி தெரிவித்தார். அனைத்து இயக்குநர்கள் மற்றும் தணிக்கையாளர்களது ஆலோசனைக்கும், உதவிக்கும் தலைவர் நன்றியினை தெரிவித்துக் கொண்டார்.

2006-2007ம் ஆண்டிற்கான இயக்குநர்களின் அறிக்கை வாசிக்கப்பட்டு அதனை ஏற்றுக் கொள்ளப்பட்டதாக கருதப்பட்டது.

## TWENTY SIXTH
## ANNUAL GENERAL MEETING


The twenty sixth Annual General Meeting of the TNPHC Ltd. was held on 10th July 2007.


The meeting approved and adopted the Directors' report, the audited balance sheet as on 31.03.07, profit and loss account for the year ended 31.03.07 and declared a dividend at the rate of 50% on equity share capital to be paid to the Government of Tamil Nadu.


The Chairman addressed the Directors and explained the performance, both physical and financial, of TNPHC Ltd. over the years with special reference to the year 2006 - 07.

The Chairman highlighted the renewal of ISO 9001 : 2000 certificate for three years with effect from 12.12.06, launching of quarterly bulletin from 31.03.07, aggressive computerisation in the company and development of application software to monitor the physical and financial progress of projects. He conveyed his gratitude to the Government of Tamil Nadu for its valuable guidance and support and thanked all Directors and Auditors of the company for their guidance, contribution and support.

The Directors' report for the year 2006 - 2007 was also presented and the same was considered as adopted.








Address by the Chairman Tr. K.P. Jain, IPS



The Chief Secretary, the CMD and the Home Secretary in the midst of a discussion

### நிதிநிலை முக்கிய அம்சங்கள்

ரூபாய் இலட்சங்களில்

| குறிப்புகள் | மார்ச் 31, 2007 ல் முடிவடைந்த வருடத்திற்கு | மார்ச் 31, 2006 ல் முடிவடைந்த வருடத்திற்கு |
|---|---|---|
| அ. வட்டி, கழிவு மற்றும் வரிகளுக்கு முன் இலாபம் | 269.96 | 302.63 |
| ஆ. கழிக்க : வட்டி, கழிவு மற்றும் வரிகள் | 144.50 | 194.75 |
| இ. வரிக்கு பின் இலாபம் | 125.46 | 107.88 |
| ஈ. ஒதுக்கீடுகளுக்கு உபயோகப்படுத்த உள்ள தொகை | 483.19 | 440.92 |
| | **608.65** | **548.80** |
| ஒதுக்கீடுகள் | | |
| கழிக்க : பொது சேமிப்பிற்கு மாற்றல் | 12.60 | 20.00 |
| கழிக்க : பங்கு மூலதனத்திற்கான ஈவுத் தொகை | 50.00 | 40.00 |
| கழிக்க : ஈவுத்தொகைக்கான வரி | 8.49 | 5.61 |
| இருப்புநிலைக் குறிப்புக்கு மாற்றப்பட்ட மிகுதி | 537.56 | 483.19 |
| | **608.65** | **548.80** |

### FINANCIAL HIGHLIGHTS

Rs. in lakhs

| Particulars | For the year ended March 31, 2007 | For the year ended March 31, 2006 |
|---|---|---|
| a. Profit before interest, depreciation and taxes | 269.96 | 302.63 |
| b. Less : Interest, Depreciation and taxes | 144.50 | 194.75 |
| c. Profit after tax | 125.46 | 107.88 |
| d. Amount available for appropriations | 483.19 | 440.92 |
| | **608.65** | **548.80** |
| **Appropriations:** | | |
| Less: Transfer to General Reserve | 12.60 | 20.00 |
| Less: Dividend on Equity Capital | 50.00 | 40.00 |
| Less: Tax on Dividend | 8.49 | 5.61 |
| Surplus transferred to balance sheet | 537.56 | 483.19 |
| | **608.65** | **548.80** |

**முதலின கட்டமைப்பு**

இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ( ரு. 100 இலட்சங்கள் ) முழுவதும் தமிழக அரசினால் செலுத்தப்பட்டது.

31.03.2007 நாளைய தொடர்ந்து பெருகிய சேமிப்பு மற்றும் மிகுதி ரு.6.35 கோடிகள் ஆகும்.

ரூபாய் கோடியில்

| குறிப்புகள் | 2006-2007 | கூட்டுதல் / (நீக்குதல்) | 2005-2006 |
|---|---|---|---|
| பொது சேமிப்பு | 0.97 | (0.06) | 1.03 |
| இலாபம் மற்றும் நட்டம் | 5.37 | 0.54 | 4.83 |

**செயல்முறைகளின் சீராய்வு:**

**செயல் சாதனைகள்:**

இக்கழகம் தொடங்கிய நாள்முதல் இதுவரை 16.675 இலட்ச சதுர. மீ. (1.790 கோடி சதுர அடி) பரப்பளவிற்கு கட்டிடங்கள் கட்டியுள்ளது. மேலும் 2007-2008 ஆண்டில் 1.58 இலட்ச சதுர. மீ. (17.02 இலட்ச சதுர அடி) பரப்பிற்கு கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2005-06ல் சராசரியான கட்டுமான செலவு சதுர அடிக்கு ரூ.654/- என கணக்கிடப்பட்டது. இம்மதிப்பு 2006 - 07ல் சுமாராக சதுர அடிக்கு ரூ.767/- ஆக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

**Capital Structure:**

The entire authorised share capital of the company (Rs.100 lakhs) has been fully subscribed by the Government of Tamil Nadu.

The accumulated reserves and surplus as on 31.03.2007 are Rs.6.35 crores.

Rs. in Crores

| Particulars | 2006-2007 | Addition / (Deletion) | 2005-2006 |
|---|---|---|---|
| General Reserves | 0.97 | (0.06) | 1.03 |
| Profit & Loss | 5.37 | 0.54 | 4.83 |

**Review of Operations :**

**Physical Achievements:**

The Corporation has constructed 16.675 lakhs sq.mt. (1.79 crores sq. ft) area from its inception and it proposed to construct 1.58 lakhs sq. mt. (17.02 lakhs sq. ft.) area during 2007 - 2008. The average cost of construction in 2005-06 worked out to Rs.654/- per sq. ft. and the anticipated cost of construction in 2006-07 was expected to be around Rs.767 per sq. Ft.



**Address on technical perfomances by the Chief Engineer Tr. M. Kumar**



**Address on accounts and financial perfomances by the General Manager Tr. N. Ramaraj**

## POLICE QUARTERS COMPLETED DURING THE PERIOD JULY TO SEP '07

### குடியிருப்புகள்

| இடம் | எண்ணிக்கை | மதிப்பு ரூபாய் இலட்சங்களில் |
|---|---|---|
| சிங்காரத்தோட்டம்,சென்னை. | 196 | 922.09 |
| ஓட்டேரி, சென்னை | 64 | 329.95 |
| தட்சிணாமூர்த்தி கோவில் தெரு, சென்னை | 104 | 481.89 |
| புதுப்பேட்டை, சென்னை | 197 | 970.13 |
| மாம்பலம், சென்னை | 156 | 718.71 |
| அசோக் நகர், சென்னை | 120 | 497.37 |
| சைதாப்பேட்டை,சென்னை | 70 | 311.63 |
| ஆர்.கே.பேட், திருவள்ளூர் | 20 | 79.08 |
| நாகை RP, நாகப்பட்டினம் | 7 | 31.68 |
| **மொத்தம்** | **934** | **4342.53** |

### Quarters

| Name of Place | No. of Quarters | Cost Rs. In Lakhs |
|---|---|---|
| Singara Garden, Chennai | 196 | 922.09 |
| Otteri, Chennai | 64 | 329.95 |
| Dakshinamoorthy Koil Street, Chennai | 104 | 481.89 |
| Pudupet, Chennai | 197 | 970.13 |
| Mambalam, Chennai | 156 | 718.71 |
| Ashok Nagar, Chennai | 120 | 497.37 |
| Saidapet, Chennai | 70 | 311.63 |
| R.K.Pet, Tiruvallur | 20 | 79.08 |
| Nagai RP, Nagapattinam | 7 | 31.68 |
| **Total** | **934** | **4342.53** |



**196 PC's / HC's quarters at Singara Garden, Chennai**



**64 PC's / HC's quarters at Otteri, Chennai**



**104 PC's / HC's quarters at Dhakshinamoorthy Koil Street,Chennai**



**197 PC's / HC's quarters at Pudupet, Chennai**



**156 PC's / HC's quarters at Mambalam, Chennai**



**120 PC's / HC's quarters at Ashok Nagar, Chennai**



**70 PC's / HC's quarters at Saidapet, Chennai**



**1 Ins., 1 SI, 18 PC's / HC's quarters at R.K.Pet, Tiruvallur District.**



**7 PC's / HC's quarters at Nagai (RP), Nagapattinam District.**

## POLICE STATIONS AND OTHER BUILDINGS COMPLETED DURING THE PERIOD JULY TO SEP '07

### காவல் நிலையங்கள்

| இடம் | மதிப்பு ரூபாய் இலட்சங்களில் |
|---|---|
| ஆம்பூர், வேலூர் மாவட்டம் | 21.87 |
| காவேரிப்பாக்கம், வேலூர் மாவட்டம் | 15.00 |
| பாலக்கரை, திருச்சி மாவட்டம் | 21.87 |
| தேவகோட்டை, சிவகங்கை மாவட்டம் | 21.87 |
| திருச்சுழி, விருதுநகர் மாவட்டம் | 15.00 |
| **மொத்தம்** | **95.61** |
| **இதரக் கட்டிடங்கள்** | |
| மாவட்ட காவல் அலுவலகம், பெரம்பலூர் | 300.00 |
| மாவட்ட காவல் அலுவலகம், நாமக்கல் | 300.00 |
| மண்டல் தடய அறிவியல் கட்டிடம், திருநெல்வேலி | 90.00 |
| நவீன கட்டுப்பாட்டு அறை, திருச்சி | 40.00 |
| **மொத்தம்** | **730.00** |

### Police Stations

| Name of Place | Cost Rs. In Lakhs |
|---|---|
| Ambur, Vellore District | 21.87 |
| Kaveripakkam, Vellore District | 15.00 |
| Palakarai, Trichy District | 21.87 |
| Devakottai, Sivagangai District | 21.87 |
| Thiruchuli, Virudhunagar District | 15.00 |
| **Total** | **95.61** |
| **Other Buildings** | |
| DPO, Perambalur | 300.00 |
| DPO, Namakkal | 300.00 |
| Regional Forensic Science Laboratory, Tirunelveli | 90.00 |
| Modern Control Room, Trichy | 40.00 |
| **Total** | **730.00** |



**Police Station at Ambur, Vellore District**



**Police Station at Kaveripakkam, Vellore District**



**Police Station at Palakarai, Trichy District**



**AWPS at Devakottai, Sivagangai District**



**Rural PS at Thiruchuli, Virudhunagar District**



**Regional Forensic Science Laboratory at Tirunelveli**



**Modern Control Room at Trichy**

## NAMAKKAL DPO BUILDING




**FRONT VIEW**



**MAIN ENTRY**

**FOYER**



## QUARTERLY MEETING HELD ON 09.08.07

உயர் காவல்துறை அதிகாரிகள் மற்றும் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழக அதிகாரிகளுடன் பொதுவான பிரச்சனைகள் பற்றி பேசிட காவல்துறை இயக்குநர் / தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழக தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் காலாண்டு கூட்டங்களை கூட்டுவார். இக்கூட்டங்களில் பல பணிகளின் வளர்ச்சி சீராய்வு செய்யப்படும். மேலும் பணிகளில் ஏற்படும் இடர்பாடுகளுக்கும், நிலுவையில் உள்ள துறைகளுக்கிடையேயான பிரச்சனைகளுக்கும் தீர்வு காணப்படும்.

கடந்த காலாண்டு கூட்டம் 09.08.07 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் இராஜா அண்ணாமலைபுரத்தில் கட்டப்பட இருக்கும் குடியிருப்பின் நிலத்திற்கான உரிமம், வியாசர்பாடிக்கு மாற்றாக உயர்நீதிமன்றத்தில் அமைக்கவிருக்கும் காவல் நிலையம், அரசினை நாடி காவல்துறை கட்டிடங்களை பராமரிக்க நிதி உதவி கேட்டல், முடிவுற்ற கட்டிடங்களை பயனாளித்துறையிடம் ஒப்படைத்தல், சில கடலோர காவல் நிலையங்களுக்கான இடங்களை கண்டறிதல், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் ஒப்புதல் பெற தாமதமாகும் திட்டங்களுக்கு மாற்று இடங்களில் குடியிருப்புகளை அமைத்தல் போன்ற கருத்துகள் விவாதிக்கப்பட்ட்து.

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ள திட்ட விபரங்களாகிய குடியிருப்புகள் அமையும் இடம், எண்ணிக்கை, முடிக்கப்பெறும் நாள் மற்றும் தற்போதைய நிலை ஆகிய அனைத்தும் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழக www.tnphc.com இணையதளத்தில் வெளியிடப்படும் என தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழக தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் தெரிவித்தார்.

Quarterly meetings are conducted by the DGP and Chairman cum Managing Director of TNPHC Ltd. along with other senior police officers and officials of TNPHC Ltd. to address common issues. The progress of various works are reviewed and bottlenecks and pending interdepartmental issues discussed and solutions evolved.

The last quarterly meeting was held on 09.08.07 in Police Officers Mess, Egmore, Chennai. At this meeting issues like ownership of land in respect of proposed quarters at Raja Annamalaipuram, Police Station at High Court instead of Vyasarpadi, seeking funds from Government for the maintenance of existing police buildings, handing over of completed buildings to user department, identification of land for some of the Marine Police Stations, accommodating quarters at alternate places in cases where planning clearance is likely to be delayed were discussed.

The CMD /TNPHC informed that,the TNPHC website www.tnphc.com would display all details like place, number of quarters, target date and present stage of all schemes undertaken by TNPHC Ltd.



## DISCUSSION ON COMMISSIONERATE BUILDING AT CHENNAI

வேப்பேரியில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள சென்னை பெருநகர் காவல் ஆணைய கட்டிடத்திற்கான பொது அமைப்பு மற்றும் முகப்பு பற்றிய ஆலோசனை கூட்டம் 2007 செப்டம்பர் 7-ம் நாள் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழக கலந்தாய்வு கூடத்தில் நடைப்பெற்றது.

இக்கூட்டத்தில் காவல்துறை தலைமை இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு), சென்னை பெருநகர் காவல்துறை ஆணையர், காவல் துறை இணை ஆணையர் (த.இ.) தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் தலைவர்/நிர்வாக இயக்குநர் மற்றும் இக்கழக உயர் அதிகாரிகள் பங்கேற்றனர். தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழக அதிகாரிகளால் வடிவமைக்கப்பட்ட பல்வேறு வரைபடங்கள் 'Power Point' மூலம் திரையிடப்பட்டு விளக்கப்பட்டது. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திடம் திட்ட அனுமதி பெறுவதற்கான வரைபடங்கள் தயார் செய்து தொடர் நடவடிக்கை எடுக்க முடிவு செய்யப்பட்டது.

உத்தேசிக்கப்பட்டுள்ள பணியிடத்தில் இருக்கும் பழைய கட்டிடங்களை இடிக்கும் பணி துவங்கபட்டுள்ளது. இது அக்டோபர் 2007ன் முடிவில் நிறைவு பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

A discussion on the general building arrangements and elevation of the proposed Chennai Commissionerate Complex at Vepery was held on 7th September ,2007 in the Conference Hall of TNPHC Ltd.

The senior police officers present during the discussion included the DGP, Law & Order, the COP, the JC (HQ), CMD and senior officials of the TNPHC. Power Point presentation was made to highlight the pros and cons of the various alternatives proposed by TNPHC officials. It was agreed to proceed with preparation of drawings for planning permission from the CMDA.

The work of demolition of the old buildings on the proposed site has commenced and is expected to be completed by the end of Oct'2007.



## 60வது சுதந்திரதினம் கொண்டாட்டம்

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் ஆகஸ்ட் 15ம் நாள், 2007 அன்று 60வது சுதந்திர தின விழா கொண்டாடியது. தேசியக் கொடியை தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் ஏற்றி வைத்து, பணியாளர்களுக்கும், அவர்களது குழந்தைகளுக்கும் நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கினார். பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வில் மிக சிறப்பாக தேர்ச்சி பெற்ற குழந்தைகளுக்கும் வெகுமதி வழங்கப்பட்டது. இந்த ஆண்டிற்கான "சிறப்பு திறமைக்கான விருது" ஆறு பொறியாளர்களுக்கு வழங்கப்பட்டது. சான்றிதழ், நினைவுப் பரிசு மற்றும் ரூ.5000/- பண வெகுமதியுடன் இவர்கள் கவுரவிக்கப்பட்டனர்.



National Flag being hoisted by the CMD

## INDEPENDENCE DAY CELEBRATION

TNPHC Ltd celebrated the 60th Independence Day on the 15th August 2007. The National Flag was hoisted by the Chairman and Managing Director and prizes were distributed to the winners of various competitions and sports events conducted among the employees and their children. Children who excelled in the tenth and twelfth standard examinations were also rewarded. "Award for Excellence" for this year was given to six engineers. They were honoured with a citation, memento and cash reward of Rs.5000.





SPORTS EVENTS





PRIZE DISTRIBUTION

## 2007 ஆண்டின்
## "சிறப்பு திறமைக்கான விருது" பெற்றவர்கள்

**திரு. V. அரவிந்தன் பொ.இ., உ.நி.பொ., கோவை**

திரு. வி. அரவிந்தன் ஊட்டி உபகோட்ட பணியின் பொறுப்பில் உள்ளார். இவர் மலைப் பகுதியின் அசாதாரன சூழலிலும் தனது பணியில் சிறந்த தேர்ச்சியினை காட்டியமைக்காக வெகுமதி அளிக்கப்பட்டது.

**திரு. K. ஜேம்ஸ்தாஸ்,பொ.இ.,உ.நி.பொ.,விழுப்புரம்**

வேலூர் உபகோட்ட பணியின் பொறுப்பில் உள்ள திரு.கே.ஜேம்ஸ்தாஸ் வேலூரில் உள்ள பாரம்பரியம் மிக்க திப்பு மஹால் கட்டிடத்தை அதன் கலை நுட்பத்திற்கு மாசில்லாமல் சிறந்த முறையில் புதுப்பிக்கப்பட்ட பணியினை குறித்த காலத்தில் முடித்து பயனாளித்துறையினரின் முழு திருப்திக்கு அளித்தமைக்காக இவ்விருது வழங்கப்பட்டது.

**திரு. D. சண்முகம், பொ.இ.,உ.நி.பொ., கோவை**

த.வீ.வ.வாரியத்திலிருந்து அயற் பணியில் பணி செய்த காலத்தில் கோவையில் உள்ள உக்கடம் காவல் நிலைய கட்டிடத்திற்கு மிக மோசமான மண் தன்மை கொண்ட இடத்தில் தனது சீரிய முயற்சியால் 15 அடி ஆழத்தில் வெற்றிகரமாக அடிதளம் அமைக்கும் பணியை முடித்தமைக்காக இப்பரிசு வழங்கி அங்கீகரிக்கப்பட்டார்.

**திரு. G. இராஜேந்திரன், பொ.இ.,உ.பொ., தலைமை கோட்டம்**

த.வீ.வ.வாரியத்திலிருந்து அயற் பணியிலிருக்கும் இராஜேந்திரன் அதிகப்படியான முயற்சிகள் மேற்கொண்டு இராயபுரத்தில் 92 குடியிருப்புகள் மற்றும் யானைக்கவுனி & பூக்கடை காவல் நிலைய கட்டுமான பனிகளை விலைவாசி ஏற்றம் மற்றும் தொழிலாளர் பிரச்சனைகளுக்கிடையில் குறித்த காலத்தில் முடிக்கப்பெற்றமைக்காக இவ்விருது வழங்கப்பட்டது.

**திரு. G. முரளிதரன், பொ.இ., உ.பொ., விழுப்புரம்**

இந்த பொறியாளர் தமிழ்நாடு மாநில கட்டுமான கழகத்தில் இருந்து அயற்பணியில் பணியாற்றி வருகிறார். இவர் ஆம்பூர் மற்றும் திருப்பத்தூரில் குடியிருப்புகளும், வேலூரில் பயிற்சி மையம் கட்டும் பணிகளை பயனாளி துறையினரின் திருப்திக்கு குறித்த காலத்தில் முடிக்க பங்களித்தமைக்கு இவ்விருது வழங்கப்பட்டது. மேலும் இவர் வேலூரில் உள்ள திப்பு மஹால் புதுப்பிக்கும் பணியிலும் ஈடுப்பட்டிருந்தார்.

**திரு. V. திருமாறன், ப.பொ.இ., இ.பொ., திருச்சி**

திருச்சி கோட்டத்தில் பணியாற்றும் இளநிலை பொறியாளரான இவர் திருச்சி மாவட்ட காவல்துறை அலுவலகம் கட்டி முடிக்கப் பெற பங்களித்தமைக்காக இவ்விருது வழங்கப்பட்டது. கூடுதலாக கும்பகோணத்தில் 33 குடியிருப்புகளின் கட்டுமான பணியினையும் நிறைவாக கவனித்தார்.

## RECIPIENTS OF "AWARD FOR EXCELLENCE" FOR 2007



**Tr. V. Aravindhan, B.E., AEE, CBE Dn.**

Tr. V. Aravindhan is incharge of works in Ooty Sub Division. He was rewarded for having shown excellent results in hilly terrain which has obvious disadvantages.



**Tr. K. JamesDhass, B.E., AEE, VPM Dn.**

Tr. K. James Dhass is incharge of works in Vellore Sub Division.He was rewarded for his contribution in renovation works of Tippu Mahal, Vellore. The work was executed without deviating from the existing architecture and completed in time to the entire satisfaction of the user department.



**Tr. D.Shanmugam, B.E., AE, CBE Dn.**

The Asst Engineer deputed from TNHB was recognised for his dedicated effort in successfully laying foundation at a depth of 15ft for Police Station in Ukkadam, Coimbatore where the condition of the soil was poor.



**Tr. G. Rajendran, B.E., AE, HQ Dn.**

Tr. G. Rajendran deputed from TNHB made extra efforts in getting the construction of 92 quarters at Royapuram and Police Stations at Elephant Gate & Flower Bazzar completed in time in spite of difficult conditions like price escalation and labour problems.



**Tr. G. Muralidaran, B.E., AE, VPM Dn.**

The Asst Engineer is on deputation from TNSCC .He has been rewarded for his contribution in completing the construction of quarters at Ambur, Tirupattur and In-service Training Centre at Vellore in time to the complete satisfaction of the user department. In addition to this he was also involved in the renovation works at Tippu Mahal , Vellore.



**Tr.V. Thirumaran, D.C.E, JE, TRY Dn.**

He is working as Junior Engineer in Trichy Division. He was rewarded for his contribution in completing the construction of DPO building,Trichy in time. He also successfully supervised construction of 33 quarters at Kumbakonam.

## பொறியாளர்கள் தினம்

பொது பொறியியல் துறையில் சிறந்த முறையில் பங்களித்த பாரத் ரத்னா சர் விஸ்வேஸ்வரய்யாவை நினைவு கூறும் வகையில் இந்திய பொறியாளர்கள் சமூகம் அவரது பிறந்த நாளான செப்டம்பர்-15ம் நாளை "பொறியாளர்கள் தினம்" ஆக அனுசரிக்கின்றனர். பொது பொறியியல் துறையில் ஈடுபட்டுள்ள துறையான தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகமும் பொறியாளர்கள் தினம் அனுசரிப்பது பொருத்தமானது என கருதப்பட்டது. இதனை தொடங்கிடும் வகையில் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் கலந்தாய்வுக் கூடத்தில் 17.09.2007 அன்று ஒரு சிறிய விழா நடத்தப்பட்டது. இதற்கு தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் தலைமை வகித்தார்.

தலை சிறந்த பொறியாளரான சர் விஸ்வேஸ்வரய்யாவின் பங்களிப்பினை தலைமைப் பொறியாளர் நினைவு கூர்ந்தார். அவரது பல பங்களிப்பில் குறிப்பிடத்தக்கதான கிருஷ்ண ராஜ சாகர் அணையினை முன்னிலைப்படுத்தி கூறினார். பொறியாளர்கள் தரமான பொருளினை தயாரிக்கக் கூடிய வகையில் தங்களை நடத்திக் கொள்வதின் முக்கியத்துவத்தினை தலைமை பொறியாளர் தனது உரையில் உணர்த்தினார். தலைமை பொறியாளர், பொறியாளர்களது "நன்னடத்தை கோட்பாடு" களை படித்து தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் நன்மதிப்பை காப்பாற்றும் வகையில் இக்கோட்பாட்டினை அனைத்து பொறியாளர்களும் பின்பற்றும்படி கேட்டுக்கொண்டார். பொது மேலாளர் அவரது உரையில் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழக வளர்ச்சிக்கு பொறியாளர்கள் ஆற்றும் முக்கிய பங்கினை சுட்டிகாட்டி இக்கழகம் தனது இலக்குகளை அடைய பொறியாளர்கள் உற்சாகத்துடன் பணியாற்ற வேண்டும் என கூறினார். தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் அவரது உரையில் பொறியாளர்கள் இச்சமுதாயத்திற்கு பங்களித்தவற்றினை கோடிட்டுக் காட்டினார். இவ்விழா அர்த்தமுள்ளதாக இருக்கும் வகையில் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் ஒவ்வொரு ஆண்டும் பிரசித்தி பெற்ற பொறியாளரது சொற்பொழிவினை ஏற்பாடு செய்யும்படி ஆலோசனை கூறினார்.

## ENGINEER'S DAY CELEBRATION

As a tribute to Bharat Ratna Sir Mokshagundam Visvesvaraya, an eminent engineer, who had contributed significantly to Civil Engineering, the Engineering fraternity of India observes his birth day, the 15th of September as "Engineers' Day". Being an organisation involved in Civil Engineering activities , it was felt appropriate to observe Engineers' Day in TNPHC Ltd also. A small function was conducted on 17.09.07 in the conference hall of TNPHC Ltd. to mark a beginning from this year. The Chairman cum Managing Director / TNPHC Ltd. presided over the function.

The Chief Engineer recalled the contribution of the great engineer Sir .M. Visvesvaraya, with special mention of the Krishna Raja Sagar Dam, notable among his various contributions. He spoke of the importance of the conduct of engineers in producing quality product. The Chief Engineer read out the Engineers' code of conduct and appealed to the Engineers to follow it to uphold the reputation of TNPHC Ltd. The General Manager in his address pointed out the pivotal role played by the Engineers in the growth of TNPHC Ltd. and the necessity to work with zeal to achieve the goals of this organisation. In his address, the Chairman and Managing Director cited the contribution of Engineers to the society. To make the function more meaningful, the CMD suggested that a commemorative lecture by an eminent engineer may be organised by the TNPHC every year.

### ஆசிரியர் குழு

**திரு. மா. குமார், (தலைமை ஆசிரியர்)**
தலைமை பொறியாளர். தொ.பே. 28364749

**திரு. ச. இராசசேகரன், (இணை ஆசிரியர்)**
உ.நி.பொறியாளர், ISO & QC. தொ.பே. 28364761

### EDITORIAL TEAM

**Tr. M. Kumar** (Chief Editor)
Chief Engineer, Phone 28364749

**Tr. S. Rajasekharan** (Associate Editor)
Asst. Exe. Engineer, ISO&QC, Phone 28364761

**TAMIL NADU POLICE HOUSING CORPORATION LTD.**
(ISO 9001:2000 CERTIFIED COMPANY)
132, E.V.R Salai, Kilpauk, Chennai - 600 010.
E-mail id : tnphcl@eth.net | Website : www.tnphc.com